# சொல்லின் மேல் படரும் பொருள்

சுதா மாணிக்கம்

# சொல்லின்மேல் படரும் பொருள்

(கவிதைகள்)

M.Sudha Tr.
Iswaryam Nilayam
E2, I.H.F D Nagar,
Chathiram Karuppur,
Korannattu Karuppur(Po),
Kumbakonam-612 501.

சுதா மாணிக்கம்

வளரி எழுத்துக்கூடம்

சொல்லின்மேல் படரும் பொருள் (கவிதைகள்)

சுதா மாணிக்கம் ©

வளரி வரிசை எண்: 09

முதற் பதிப்பு : செப்டம்பர் 2022

வெளியீடு : வளரி எழுத்துக்கூடம்
32, கீழத்தேர் வீதி, மானாமதுரை-630 606
தொடர்பு எண்: +91 78715 48146
இமெயில் : valaripoems09@gmail.com

வடிவமைப்பு: ந.ரமேஷ்குமார்
அட்டை வடிவமைப்பு : லாக் பாஸ்கர்
அச்சு : ரியல் இம்பேக்ட், சென்னை

பக்கங்கள் : 92
விலை ரூ. 100/-

Sollinmel Padarum Porul

Sudha Manikkam ©

Valari Serial : 09

First Edition : September 2022

Published by
Valari Ezhuththuk Koodam
32,East Car Street,
Manamadurai-630606
Contact No: +91 78715 48146
Email: valaripoems09@gmail.com

Layout: N. Ramesh Kumar
Cover Design : Lak Bhaskar
Printed at Real Impact, Chennai

Pages : 92
Price : Rs. 100/-



பெண்களுக்கான தன்னம்பிக்கை தந்த
**தந்தை பெரியார்** அவர்களுக்கும்

இந்தியாவின் முதல்
பெண் ஆசிரியர்
**சாவித்ரிபாய் புலே** அவர்களுக்கும்

புத்தகப் பூங்காக்களின்
பொன்மலரான
என் பேரன்பு மகள்
**தி.சாந்தினி ஐஸ்வர்யா**வுக்கும்
என் கவிதைகளைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்

# பதிப்புரை

ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் சொல்லுக்கு விளக்கம் தரும் பல நூற்பாக்கள் சொல்லதிகாரம் பகுதியில் உள்ளன. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று முதல் நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொல் என்பது ஏதொன்றையும் சுருக்கமாய்க் குறிக்கும் அடிப்படை மொழிக்கூறு. உலகில் உள்ள மிகப்பெரும்பாலான மொழிகளில் சொற்களைக் கோத்து சொற்றொடர் வழி ஒரு கருத்தோ, செய்தியோ தெரிவிக்கப்படுகின்றது. சொல் என்பது ஒரெழுத்தாலோ, பலவெழுத்துகளாலோ ஆக்கப்பட்டு ஒரு பொருளைத் தரும் மொழிக்கூறு.

இப்படியாகச் சொல்லப்படும் சொல், சுதாவின் எழுதுகோல்வழி கவிதைகளாக வாய்த்திருக்கின்றன. எட்டுத்திக்கிலும் தனது கவிப்பார்வையைக் கூர்மையாகச் செலுத்தி ஈழம் மற்றும் சிரியா போர்களில் குழந்தைகள் கொன்றொழிக்கப்பட்ட கொடூரம், குறிப்பாக பாலச்சந்திரன் வதைசெய்து படுகொலை செய்யப்பட்ட வேதனையை வரிகளாக வடித்திருப்பது சிறப்பு. பெண் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்ட சுதா மலாலா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியையும் இங்கே கண்டனம் செய்திருக்கிறார். இறை நம்பிக்கை உள்ளவராக இருந்தபோதிலும் தந்தை பெரியாரின் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளால் தமிழர்கள் அடைந்த பயன்களை நெஞ்சில் நிறுத்தி, குறிப்பாகப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்பதைக் கவனத்தில்கொண்டு பெரியாரை யுகச்சிற்பி என்கிறார். பெரியாரின் பகுத்தறிவுவழி நின்று பாக்கள் வடித்த பாரதிதாசனையும் பக்கத்துணையாகக் கொள்கிறார்.

ஆண் பெண் சமநிலை பற்றிப் பேசுவதற்கு முன்பாக பெண்ணுக்குப் பெண் சமத்துவம் பேணப்படுகிறதா என்றொரு வியத்தகு கேள்வியை அறம் சார்ந்து கேட்டிருக்கிறார்.

இப்படி இன்றைய காலகட்டத்திற்குத் தேவையான எல்லாவகைக் கருத்துகளையும் தனது கவிதைகளில் கையாண்டிருக்கிறார்.

நூலாசிரியர் சுதா ஆசிரியராகப் பணிபுரிகின்ற காரணத்தால், அந்தப் பதவிக்குரிய மிடுக்கும், கம்பீரமும், பொறுப்புணர்வும் இவரது கவிதைகளில் மேலோங்கி நிற்கின்றன. சொல்வின்மேல் படரும் பொருள் வாசக மனங்களுக்குள் ஊடுருவி வரவேற்பைப் பெறும் என்கிற பெரும் நம்பிக்கையோடு வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளுடன்,

**அருணாசுந்தரராசன்**

# அறியாமைக்குச் சவுக்கடி கொடுக்கும் வரிகள்

**நேசகி சுமி**

ஆசிரியை

இவ்றி சூர்சென் தமிழ்ச்சோலை,

பிரான்சு

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்றால் அதில் கவிதையும் ஓர் அங்கமே!

கவிதைமொழி எப்போதும் வித்தியாசமானதே! அது கவிஞருடைய சுயத்தின் மொழியாகச் சிந்தனையின் சிதறலாக இருத்தல் வேண்டும்.

'சொல்லின்மேல் படரும் பொருள்' என்னும் இக்கவிதை நூலும் ஓர் சுயத்தின் மொழியாகவே சொற்களின் பொருளுணர்த்தி உருவகித்திருக்கிறது.

**'நீ இல்லாத நாள்கள்'**

என்ற தலைப்பை முதல் கவிதையாகத் தாங்கித் தொடங்கியிருக்கும் முதற் கவிதை நூலின் பெயரையும் கவிஞரின் கவிமொழியையும் வழித்தொடராய்ப் பொருள் விளக்கி, மெதுவாய் நகர்ந்து செல்கிறது.

இந்நூலில் படர்ந்து செல்லும் கவிதைகள் ஒவ்வொன்றும் சுருக்கமாய்ச் சுருக்கென அமைந்த கவிதைகளாகவே வாசகர் மனங்களைக் கவரும்படி அமைந்துள்ளன.

எப்போதும் தமிழ்க்கவிதை மரபில் அதுவும் புதுக்கவிதைகளில் சொற்களின்மேல் ஓர் தொடர்ச்சியும் நீட்சியுமாக நெருக்கமான உறவு ஒன்று பிணைக்கப்பட்டதாகவே இருக்கும்.

எண்ணமும் உணர்ச்சியும் உணர்வின்பால் அகத்திடை தோன்றி, அது எழுத்தின்பால் வெளியாகுகையில் அன்பின், நேசத்தின், காதலின், ஊடலின், புணர்ச்சியின், உறவின், இரங்கலின், பிரிவின், சமூகத்தின், உரிமையின் எனத் தொடர்ச்சியான அக, புறவுணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. மேலும் உட்கிடக்கைகளாக எழுந்தும், அடங்கியும், அமைதிபெற்றும் சொல்லின்பால் உணர்வுகளால் எழுத்து எனும் வடிவம் பெற்று கவிதையாகச் சங்கமம் பெறுகின்றன.

கவிஞர் சுதா மாணிக்கம் அவர்களின் இக்கவிதைகளும் அவ்வாறேதான் அகப்புற உணர்வுகளால் எழுத்துருப் பெற்ற கவிதைகளாக வடிவம் பெற்றுள்ளன.

"வாரி அணைத்து
மகிழவேண்டிய வயதில்
வாரி கொடுத்தல்
வாழ்நாள் துயரம் தானே...?"

என இடையிட்டுத் தொட்டுணர்த்திய வரிகள் ஈழமண்ணில் எம் இளவல் பாலச்சந்திரனின் இழப்பையும், தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களின் ஈகமும் மனத்தில் தாங்கி இன்னுமின்னும் உணர்வுகளாய் மறைந்தும் மனங்களில் வாழ்கின்ற உறவுகளின் வாழ்தலைச் சொல்கின்றது.

"சொல்லின்மேல் படரும் பொருள்" எனும் இக் கவிதை நூலின் தொடராக தலைப்புகளோடு அமைந்து செல்லும் பல கவிதைகள் கவிதை நூலின் பெயரைப் பிரதிபலித்தே தொடர் நீட்சியோடு வடிவம்பெற்று உணர்வுகளின் பொருள்கூறி ஒவ்வொரு கவிதையையும் வாசித்து நகர்கையில் இலகுவாய்ச் சட்டென மனத்தில் அமர்ந்துகொள்கின்றன.

மிக எளிமையான சொல்லாடல்களோடு பொருள் பொதிந்து அமைந்துள்ளன.

'யாதுமாகிய என் மொழி' என்னும் தலைப்பிலான கவிதையில்

என் மொழிக்கு
என்ன கைமாறு செய்வேன்?
பொது வெளியில்
என் மொழியில்
நானும் உரையாடி
பிறரையும் உரையாடச் செய்து
உயிரெனக்கொள்வதே நான் செய்யக்கூடியது...!

எனச் சொல்வதே மொழிக்காக அவரளிக்கும் நன்றியாகிவிடுகிறது. மொழியின் இலகுத்தன்மை புரிதலோடான எளிய சொற்களால் அனைத்துக் கவிதைகளையும் எளிய நடையில் ஆழமான எண்ணங்களின் வலைப்பின்னல்களோடு கவிதைகளின் கோர்ப்புகளாக அமைத்திருக்கின்றார் சுதா மாணிக்கம் அவர்கள்.

சிறு சிறு தலைப்புகளத் தாங்கிவரும் கவிதைகள் பசுமரத்தில் பதிந்த ஆணியைப்போல் மனத்திலும் பதிந்து செல்கின்றன. அதில் பெரும் கருத்தாழத்தை 'யுகச்சிற்பி' எனும் கவிதை பகுத்தறிவுச் சிந்தனையால் பாமரருக்கும் அறிவுப்பாடம் புகட்டிய தந்தை பெரியாரின் சிந்தனைக்கு மகுடம் சூட்டியிருக்கிறது.

ஓயாத அலையாக இன்னும் எழுந்தும் விழுந்தும் அடித்துக்கொண்டிருக்கும் சாதியச் சடங்குகளைச் சாடியிருக்கும் வரிகளில் சடங்குகள், சம்பிரதாயங்கள் எனும் பெயரில் இறந்துபோன உடலையும் இருக்கும் உயிரையும் உருவிக்கொண்டிருக்கும் சமூகத்தின் அறியாமைக்குச் சவுக்கடி கொடுக்கும் வரிகள் சமூகத்தின் முதுகெலும்பை நிமிர்ந்திடச் செய்திருக்கின்றன. இதுபோல் பல கவிதைகள் சமூகத்தைத் தட்டி எழுப்புவதாக அமைந்து புதுக்கவிதையூடு சமூகப் பிரச்சனைகளையும் பேசவேண்டும் என்பதை மிகத் தெளிவாக தனது கவிதை மொழிகொண்டு வடித்திருக்கிறார் சுதா.

பெரும்பாலான கவிதைகளை அகத்தின் மொழியால் உணர்வுபூர்வமான சொற்களைக்கொண்டு உள்ளிருத்தி எழுதியிருக்கிறார். அன்பும் பேரன்பும் அதன் பிரிதலும் மறத்தலுமென உணர்வுகளால் உணரப்பட்டிருக்கின்றன.



REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:07

தனிமை வலைக்குள்
என்னை நானே பிணைத்துக்கொண்டு
வருந்திக்கொள்ளுதலும்
கருப்பைக்குள் உறைந்தபடியே
வெளிவரும் குழந்தையாய்
நான் வெளிவருவது நிதர்சனம்...!

இக்கவிதையின் இடையிட்ட வரிகளை மட்டும் சுட்டினாலே போதும் ஒரு மழையோடு ஒரு மனிதனின் மனத்தினை ஒப்பிட்டு மழையின் மாண்பினை உணர்த்தியிருப்பது மிகையே.

பொருள் பொதிந்த கவிதைகள் படிக்கும் வாசகர்களையும் சுருக்கெனப் பொருளுணரச் செய்திடும்.

அடுத்தடுத்த கவிதை நூல்களை அடுக்கடுக்காய் எழுதிக் கோர்த்து வெளியிடு செய்திட இந்தக் கவிதை நூலில் கிடைத்த அனுபவம் கவிஞர் சுதா மாணிக்கத்திற்குத் துணையாய் அனுபவமாய் கற்றலாய் அமைந்திட மனமார்ந்த வாழ்த்துகளும் பேரன்பின் பிரியமான மொழிகளும் உரித்தாகட்டும்.

வளரியோடு பயணித்த இரண்டாண்டுகால கவிதைப் பயணம் முதன்முதலாய் ஓர் வளரி உறவின் கவிதை நூலுக்கு அணிந்துரை எழுதுவதற்கு வாய்ப்பாக அமைந்ததிலும், அந்த வாய்ப்பை பெருமனத்தோடு தன் நூலுக்கு அமைத்துத் தந்த கவிஞர் சுதா மாணிக்கம் அவர்களுக்கும்,

அத்தனை பெரும் நம்பிக்கையை என் எழுத்தின்மீது கொண்டிருந்து வாய்ப்புத்தந்து ஊக்கப்படுத்தி நம்பிக்கையளித்த மரியாதைக்குரிய வளரி ஆசிரியர் அருணாசுந்தரராசன் அவர்களுக்கும் என் பெருநன்றி.



REDMI 9 PRIME
AI QUAD CAMERA 10/12/2023 19:09

'உன் நான்' எனும் கவிதை

நினைவுகளால் உருகிக்கொண்டிருப்பதை உருக்கமாகச் சொல்கிறது. அதன் தொடர் உணர்வுகள் இக்கவிதை நூலில் அடுத்தடுத்த சில கவிதைகளிலும் பேரன்பின் நேசத்தைப் பிரிதலின் வலிகளோடு மிருதுவான அன்பின் பந்தங்களைச் சொல்லியிருப்பதை உணரமுடிகிறது.

அன்பையும் நேசத்தையும் பிரிதலின் வலிகள் உணர்வாய் உருக்குவதை ஆங்காங்கே சில கவிதைகள் உருகி நிற்கின்றன. உயிர்கலந்த உணர்வு என்பதைத் தாண்டியும் உயிரோடு வலிதரும் உணர்வுகளால் பசியும், வலியும், மகிழ்வும் மறந்ததுவாய்ச் சில தருணங்களை மனிதன் கடந்தே ஆகவேண்டும் என்பதைச் சில கவிதைகள் உணர்த்துகின்றன.

**அந்த நாள் கவிதையில்,**
**சமவெளியின் புல் தரையில்**
**உன் விரலோடு**
**விரல் பிணைந்து நடந்து**
**வாழ்வின் யதார்த்தம் பேசி**
**இடையிடையே**
**கவிதை உரையாடி**
**மரநிழலில் இளைப்பாறி**
**மகிழ்ந்திருக்கும் நாளொன்று**
**மனக்கண்ணில் விரிகிறது.......!**

இந்த இடத்தில் இக்கவிதையை முழுமையாக எழுதிவிடலாமெனத் தோன்றியது.

"சொல்லின்மேல் படரும் பொருள்" தொகுப்பின் ஒவ்வொரு கவிதையும் சமூகம் சார்பாகவும், பெண் சார்பாகவும், பேரன்பு பிரிதல், வலியெனப் படர்ந்து வளர்ந்து அனைத்துக்குமான பொருளை உணர்த்தி நிற்கின்றது. . புதுக்கவிதையின் போக்கை எவரும் இலகுவில் புரிந்திடும் வகையில் பொருள் உணர்த்தி அத்தனை கவிதைகளும் இலாவகமாகவே கோர்வையாக சிறுசிறு தலைப்புகளோடு பயணிப்பது அழகே!

"நீ இல்லாத நாள்கள்" எனத் தொடங்கிய முதற்கவிதைபோல "மழை மனசு பேசியது" போல் அமைந்த கவிதையில்

# என்னுரை

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கனியன் பூங்குன்றனாரின் வரிகளையே வாழ்வின் வழியாகக் கொண்ட ஓர் ஆசிரியர் நான். எப்போதும் குழந்தைகளுடன் மகிழ்வோடு பயணிக்கும் பணி கொண்ட வரம் பெற்றவள்.

ஆகச்சிறந்த வாசிப்பாளரான பேரன்பு பொன்மலர் தி.சாந்தினி ஐஸ்வர்யாவின் அம்மா, அவ்வப்போது என்னிலிருந்து கசிந்தவை கவிதையாகப் படர்ந்து இன்று நூலாக.

நூலிழையில்தான் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. இழைகளையெல்லாம் நேர்த்தியாகப் பின்னி நூல் வடிவம் கொடுத்து மின்னவிட்ட ஆசான், வளரியை வார்த்தெடுத்த சூரியன் அருணாசுந்தரராசன் அவர்களுக்கு என் செந்தமிழ் வணக்கங்கள்; நன்றிகள்.

ஒவ்வொரு சொல்லையும் உற்றுநோக்கி உணர்ந்து ,பொருள் பொதிந்த அணிந்துரை வழங்கிய எங்கள் வளரி குடும்ப உறவு ஆசிரியர் நேசகி சுமி (பிரான்சு) அவர்களுக்கும் என் நேசம் கலந்த நன்றிகள்.

ஒவ்வொரு செங்கல்லாக எடுத்து வைத்துக் கட்டப்படும் வீடு போல், ஒவ்வொரு சொல்லாகக் கோர்க்கப்பட்ட கவிதைகளை நினைவுபடுத்தும் விதமாக, எல்லா வண்ணங்களையும் ஒன்றாய் ஊற்றிக்கொண்ட கருமையில் தீப்பிழம்புகளாக எரியும் பொருள் என்றும் இன்னும் பலவும் எண்ணும் விதமாக அட்டை வடிவமைத்த மூார்க் பாஸ்கரன் அவர்களுக்கும் நன்றிகள்.


REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:09

"சொல்லின்மேல் படரும் பொருள்" பாவனைகளால் எழுதப்பட்ட வரிகள். பிடிகொடுத்தும் பிடி கொடுக்காமலும் நழுவிப்போகும் வாழ்வில் எதுவுமே முழுமையானது அல்ல. அந்தந்தத் தருணங்களை வாழ்ந்ததையும் வீழ்ந்ததையும் அள்ளித்தெளிக்கும் விதமாக "சொல்லின்மேல் படரும் பொருள்".

வளரி எழுத்துக்கூடம் வழி என் கவிதை நூல் வெளியீடு சென்னையில் செப்டம்பர் 17 என்று சொன்னதும் கவிதை நூலுக்கு மற்றும் ஒரு விழா நம் குடந்தையிலும் திசம்பரில் நடத்துவோம் என்று மகிழ்வோடு உரைத்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கத் தோழர், சங்க இலக்கியம் முதல் அத்தனைத் தளங்களையும் நுட்பமாக ஆராய்ந்து பேசிக் களமாடும் கவிபொழியும் தோழர் திருமிகு.கே. முத்து அவர்களுக்கு நன்றிகள்.

மறுபடியும் மகிழ்வுடன் சொல்கிறேன், என் கவிதைப் பஞ்சுகளை எல்லாம் நூல் வடிவாக மாற்றி, அற்புத வித்தை செய்யி, தராசு போல் நடுநிலையோடு கருத்துகளை வழங்கிக் கவிமழை பொழியும் ஆசான் திருமிகு. அருணாசுந்தரராசன் அவர்களுக்கு செங்காந்தள் நன்றிகள்.

என் எழுத்துகளை நூலெனும் உயர்ந்த மாடத்தில் வைத்து அழகு பார்க்கும் வளரி எழுத்துக்கூடம் என்றென்றும் வாழ்க! வாழ்க!!

**சுதா மாணிக்கம்**
கும்பகோணம்

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:10

# நீ இல்லாத நாள்கள்

இதுபோன்றதொருநாளில்
நீ இருந்தாய்
இதுபோன்றதொரு நாளில்
உன் சிரிப்பு இருந்தது
நாம் கேக் செய்து மகிழ்ந்திருந்தோம்
நட்ட நடு இரவில் கொண்டாடினோம்
நம்முடைய உலகம் அழகாக இருந்தது
ஒவ்வொரு புத்தாண்டும்
நீ வெட்டும் கேக்குடனே விடியும்
பாப்பா
நீயற்ற பொழுதுகள்
நினைவுகளற்ற பொழுதுகளாக இருந்திருக்கலாம்
யாராவது கொஞ்சம்
மறக்கக் கற்றுக்கொடுங்கள்

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:10

# நவம்பர் 27

சந்திரனைக் காணும் போதெல்லாம்
பாலச்சந்திரனின் முகம்
வந்து வந்து வாட்டுகிறது

தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ...?
பாரதி வரிகளுக்கு
எடுத்துக்காட்டாய் மாவீரர்கள்

வாரி அணைத்து
மகிழ வேண்டிய வயதில்
வாரிக் கொடுத்தல்
வாழ்நாள் துயரம் தானே...?

பழுக்காமல் வீழ்கின்ற
மாம்பிஞ்சு பார்த்தாலே
பதறும் நெஞ்சம்
பிஞ்சுப் பாலகன்
வஞ்சகரால் வீழ்ந்தது கண்டால்
நெஞ்சு பொறுக்குதிலையே!

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:11

சிரியாவில் கரையொதுங்கும்
சின்னஞ்சிறுமலர் தொடங்கி
குண்டடிபட்டுப் பிழைத்துவந்த மலாலாவரை
அத்தனை குழந்தைகளும்
நம் அன்பிற்குரியவரே!

மாவீரர் ஈகம்
மனத்தில் தாங்கி
நிமிர்ந்தெழுவோம்!

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:11

## உயிர்

கடல் பயணத்தில்
ஒருநாளேனும்
களிக்கமுடியாத
நங்கூரத்தின் கம்பீரத்தைவிடவும்
அந்தக் குட்டி மீன்களின்
துள்ளல் ரம்மியமானது

## நெருப்பு

பெண்ணே
நீ
நெருப்புதான்
அணைத்தது
நீர் என்றாலும்
கரி
பூசப்படுவது
உன் முகத்தில்தானே

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:11

# முதலில்... இப்போது...

உன்னைப் பற்றிய நினைவுகள்
முதலில் சிலந்தி வலையைப்போல
எளிதாகவும் எளிதில்
உடையக் கூடியதுமாக
இப்போது
இரும்புக் கம்பிகளால் இறுகிக்கிடக்கிறது

உன்னைப் பற்றிய நினைவுகள்
முதலில் மொட்டுகளைப்போல
ஒரு கட்டுக்குள்ளும் கடமைகளுக்குள்ளும்
இப்போது
வளத் திட்டுகள்போல்
பரந்து விரிந்து

உன்னைப் பற்றிய நினைவுகள்
முதலில் கண்ணீர்த் துளிகளைப்போல
துடைத்துவிடக் கூடியதாய்
இப்போதோ அகண்ட கடலாக

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:12

உன்னைப் பற்றிய நினைவுகள்
முதலில் எனக்குள்
ஒன்றும் இல்லாமல்தான் இருந்தன
இப்போதோ
அதைத் தவிர எதுவுமே
ஒன்றுமில்லாமல் போய்விட்டது

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:12

# கற்றல்

தோல்வியும் இழப்பும்
தற்காலிக அவமானம்
பெண்ணுடல் தெரிந்தோ தெரியாமலோ
பார்க்கப்பட்டுவிட்டாலோ அவமானம்
ஏகப்பட்ட அவமானங்களை
அடுக்கிவைத்துள்ள சமூகம்
சன்மானமாகப் பெறுகிறது
பிள்ளைகளின் தற்கொலைகளை
எல்லாவற்றையும் தள்ளிவைக்க
எப்போது நாம்
கற்றுக்கொடுக்கப் போகிறோம்?
எல்லாவற்றிலிருந்தும்
மென்மையாய் மேன்மையாய்
அள்ளிக்கொள்ள நாம்
எப்போது கற்றுக்கொள்ளப்போகிறோம்?

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:12

# நான் என்னவாக...

காலைநேரப் புறப்பாடு
இலேசாக்குகிறது என்னை
அந்த
ஓசோன் காற்று எனக்குள்ளிருக்கும்
கடின மூலக்கூறுகளை வெகுவாகக் கரைக்கிறது
ஒரு பறவையைப்போல உணருகிறேன்

மலைகளின் உயரம்
என் எண்ணங்களை உறுதிப்படுத்துகிறது
இறுதிவரை இலட்சியத்தோடு
எழுந்து நிற்கும் பிரம்மையை உருவாக்குகிறது

சமவெளிகளில் குட்டிக்குட்டிப் பொருள்கள்
என் சின்னச் சின்ன சந்தோசங்களை
நினைவுபடுத்தும்போது
விட்டுப்போனதையும்
நான் விடாமல் வைத்திருப்பதையும்
அசை போடுகிறேன்

முட்டிக்காலில் முகம் புதைத்து
அனாயாசமாக அண்ணாந்து பார்த்திருக்கையில்
அட,
இத்தனை அழகா

என் வாழ்க்கை
வியந்து போகிறேன்

ஆர்ப்பரிக்கும் கடல்
பயம் ஓடத்தான் செய்கிறது
ஆனாலும் பாதம் நனைக்கும் அலைகள்

சின்ன வயதில்
என் கால்களைத் தழுவி
என் முகம் பார்த்த நிமிடங்கள் பளிச்சிடப் பனிக்கும் கண்கள்

கண்கொள்ளா பூதக்கண்ணாடி காட்சிப்பொருளாகும்போது
என் உயிர் எழுத்தின் வாசம் அடிக்கிறது
நானே ஒரு பூவாய்

என் ஓய்வு எனக்கு வலி தருகிறது
ஆனாலும் எனக்குத் தேவையாகவும் இருக்கிறது

என் வாழ்க்கையைப்போல
ஓர் ஏகாந்தத்தில்
நான் உறைந்து கிடக்கிறேன்
என்னை
நன்றாக்கிக் கொள்ளும்
ஓர் ஒட்டுமொத்த முயற்சியில்
நான் என்னவாகப் போகிறேன்?

REDMI 9 PRIME
AI QUAD CAMERA 10/12/2023 19:13

என் வாழ்க்கை
வியந்து போகிறேன்

ஆர்ப்பரிக்கும் கடல்
பயம் ஓடத்தான் செய்கிறது
ஆனாலும் பாதம் நனைக்கும் அலைகள்

சின்ன வயதில்
என் கால்களைத் தழுவி
என் முகம் பார்த்த நிமிடங்கள் பளிச்சிடப் பனிக்கும் கண்கள்

கண்கொள்ளா பூதக்கண்ணாடி காட்சிப்பொருளாகும்போது
என் உயிர் எழுத்தின் வாசம் அடிக்கிறது
நானே ஒரு பூவாய்

என் ஓய்வு எனக்கு வலி தருகிறது
ஆனாலும் எனக்குத் தேவையாகவும் இருக்கிறது

என் வாழ்க்கையைப்போல
ஓர் ஏகாந்தத்தில்
நான் உறைந்து கிடக்கிறேன்
என்னை
நன்றாக்கிக் கொள்ளும்
ஓர் ஒட்டுமொத்த முயற்சியில்
நான் என்னவாகப் போகிறேன்?

# ஆயுத பூஜை

நிராயுதபாணியாக
வாழ்கின்ற
எனக்கெதற்கு
ஆயுதபூஜை?

# நினைவுகள்

உடல் கண்ணாடி
உடைக்காமல்
ஊடுருவி ஒளிவெள்ளம் பாய்ச்சும் மின்னல்



REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:13

## ஓயாது

ஓய்ந்துவிட்டது
ஓயாது பெய்த மழை
எப்போதும் எனக்குள்ளே
தொடர்ந்து மழை

## தித்திப்பு

முதல்நாள் மழைக்கு
மறுநாள் குடைபிடிக்கும்
அசட்டுக் காளான்போல
சில சந்திப்புகள்
தாமதத் தித்திப்புகளாக

## மறதி

எடுத்த பொருளை
எடுத்த இடத்தில்
வைக்கும் பழக்கம்
இன்னுமா
உனக்கு வரவில்லை
எங்கே வைத்துப்போனாய்
என் இதயத்தை?

## நிலா

குளத்தில்
மிதக்கிறதே நிலா
எப்போது
தற்கொலை செய்துகொண்டது?

# நான் கண்ணகி இல்லை

நீ
மாதவியிடம் போய்
மணிமேகலைக்குத்
தந்தையான பிறகும்
உனக்காகக் காத்திருப்பதற்கு
நான்
கண்ணகி இல்லை

# மனசு

யார்
எறிந்த மனசு
அந்தச் சூரியன்?

# வாழ்ந்து கொள்கிறேன் கொஞ்சம்

மழைக்காலம் முடிந்துவிடக்கூடும்
அதற்குள்
இந்தத் தூறல்களில்
கொஞ்சம் நனைந்து பார்க்கிறேனே
அட, இலையுதிர் காலம் ஆரம்பமாகப் போகிறது
அதற்குள் மரங்களின் நிழலில்
ஊஞ்சல் கட்டி விளையாடி
கொஞ்சம் ரசித்து விடுகிறேன்
நிச்சயம் நாளைக்குள்
பூக்கள் வாடிவிடும்
அதற்குள் என் சுவாசத்திற்குச் சுகமாக
உள்ளிழுத்து விடுகிறேனே
நேற்றைய நிகழ்வுகளை
நேற்றே
நான் ரசித்திருக்கவேண்டும்
இன்று அவைகளெல்லாம்
அஃறிணை ஆகிவிட்டன
இனிமேலாவது
நான் வாழ்ந்து கொள்கிறேன்
வாழ்ந்த திருப்தியுடன் இறப்பதே
இறப்புக்கு மரியாதை

# பாரதிதாசன்

கடலின் ஆழத்தைக்
கடற்கரைத்துகள் ஒன்று
அணுவிலும் அன்று ஆராய்ந்து பார்க்கிறது

எத்துணை சிறிய இடத்திலும்
பதவிசாய் அமரும் புதுக்கவிதைபோல
எத்துணை சிறிய பாக்களிலும்
பனிச்சிடும் சொற்கள்

காயசண்டிகையாய்க் காய்ந்திருந்த தமிழுக்கு
அமுதசுரபியை அளித்த மணிமேகலை

உனது பாக்களின்
காலடிபட்டபோதுதான்
அகலிகை மனங்களில்
அறிவு வெளிச்சம் ஊடுருவியது

உன் 'பா'ரதத்தில் பவனி வருகையில்
சங்கத்தமிழ் தங்கமாகத்தான் தகதகக்கிறாள்
எங்களை
மூட நம்பிக்கையுடன் இணைத்த நூல்களை
கத்தரிக்கோலாய் வெட்டியெறிந்தன
உன் கவிதை வரிகள்

தாமரை பூத்த தடாகங்களைக் கண்ட கவிஞரெல்லாம்
பாவையரின் அழகாய்ப் பார்த்தபோது
அதில்
உழைப்பாளியின் கைகளைப் பார்த்தவன் நீ

ஆராய்ச்சிசெய்த அணு
முடிவில் முணுமுணுத்தது
தமிழ்க்கடலில் எழுதுகோல் தூண்டில் வீசி
தேடியெடுத்த சொற்களால் எழுதிய
உன்னை வாழ்த்தத் தோன்றுகிறது
வணங்கத் தோன்றுகிறது

# தேடலும் தொலைதலும்

செக்குமாட்டு வாழ்க்கையில்
திக்குத் தெரியாமல் தேடுகையில்
நிம்மதி தொலைகிறது
இக்கணத்தில்
தேடுதலின் தேடாமை நன்று
தேடுதல் சுகமே
தேடாதிருத்தல் பரமசுகம்
சிறகுகளுக்கு ஓய்வு கொடுப்போம்
சிந்தனைகளுக்குச் சிறகு கொடுப்போம்
தேடலில் தொலையுதே நிம்மதி
தேடாதிருக்க மனமே சம்மதி

# குரங்கு

தாவிக்கொண்டேயிருப்பதில்
மனம் மட்டுமல்ல
சினமும்
ஒரு குரங்குதான்

பொழுதுகளெனும்
பூமாலைகளைப் பிய்த்தெறிவதில்
மனம் வதைக்கும்
சினமும்
ஒரு குரங்குதான்

# யாதுமாகிய என் மொழி...

என்ன இருக்கிறது
என் மொழியில்?
எல்லாம் இருக்கிறது
என் தமிழில்!
குளிருக்கு இதமாக
கதகதப்பான வார்த்தைகள்
தகிக்கும் மனத்திற்கு
மழையெனப் பொழியும் ஆறுதல் வார்த்தைகள்
அச்சப்படும் உள்ளம் வீறுகொள்ள
வாகை தரும் வார்த்தைகள்
பித்துப் பிடித்தாற்போல்
உணரும் போதெல்லாம்
சத்தமின்றி வந்து என்னை
அணைத்துக் கொள்கிறது
ஓர் அனாதைபோல்
அலைகின்றபோது
என் மொழி மட்டும்தான்
முத்தம் கொடுத்து அம்மாவாகிறது

யாதுமாகி நிற்கும்
என் மொழிக்கு
என்ன கைமாறு செய்வேன்?

பொதுவெளியில்
என் மொழியில்
நானும் உரையாடி
பிறரையும் உரையாடச்செய்து
உயிரெனக் கொள்வதே
நான் செய்யக்கூடியது!

சாத்திரச் சவப்பெட்டியின்
சூழ்ச்சி ஆணிகளைச்
சூத்திரச் சுத்தியல் கையிலெடுத்து
ஆத்திரம்கொண்டே
அடித்து வளைத்த
பேரறிவுப் பெட்டகம் நீங்கள்

# என்னவள்

சடங்குகள் என்றும்
சம்பிரதாயங்கள் என்றும்
கொஞ்சம் கொஞ்சமாக
உருவிக்கொண்டிருக்கிறார்கள்
என் உயிரை
இயற்கையாக
என் உயிர்
ஒரேயடியாகப் போய்விட்டது
உன்
உயிரைத்தான் கொஞ்சம் கொஞ்சமாக .
உருவிக் கொண்டிருக்கிறார்கள்
சடங்குகள்
என்றும் சம்பிரதாயங்கள் என்றும் செயற்கையாக

# அலைகள்

மேடு பள்ளங்களுடன் இருந்தால்தான்
அது மலை
இல்லையென்றால்
அவை பிரமிடுகள்

ஏற்ற இறக்கங்களுடன் இருந்தால்தான்
அது சிற்பம்
இல்லையென்றால்
அது செவ்வகம்

வளைந்தும்
நெளிந்தும் ஓடிப
பொங்கிப் பெருகினால்தான்
அது ஆறு
இல்லையென்றால்
அது
குழம்பிக்கிடக்கும் குட்டை

நேர்க்கோடுகள் அழகுதான்
ஆனாலும்
வளைவுகளின்
இலாவகத்தில்தான்
வெளிப்படுகிறது
வாழ்க்கையின் சுவாரசியம்

# அறிவியல்

அண்ணலும் நோக்கவில்லை
அவளும் நோக்கவில்லை
ஆனாலும்
பற்றி எரிகிறது மனது
ரோம் நகரமாக

# வேளை... வேலை

வேளைக்கு
உணவு கிடைத்ததுபோக
இன்று
வேலைக்கு உணவு

# வலை

மேலே அரவம்
கீழே
ஆளை விழுங்கும் புலி
நடுவில்
புறங்கையில் வழியும் தேனுடன்
கால மரக்கிளையில்
மரண பயமற்று நான்
அட
அன்பு வலைக்குள்
அகப்பட்டபின்
எனக்கென்ன பயம்?

# கரை மீறாதே அலையே...

கடலின் ஆழிக்கூத்து
சொல்லிக்கொண்டு போகவும் நேரமின்றி
அள்ளிக்கொண்டு போனது அலை

வலை வீசி
மீன்பிடித்தல்போல்
அலை வீசி
ஆள்களைப் பிடித்துப்போன அதிர்வுகளை
அப்போதுதான் அறிந்தோம்

மணல் வீடுகளாக
மனிதர்களைப்
புனல் கொண்டுபோன பூகம்பத்தை
என்னவென்று சொல்ல?

சின்னச் சின்ன முத்துகளாம்
சிப்பிக் குழந்தைகளைத்
தனக்குள் கொண்டு சென்றதைத்
தலைமுறைகள் மறக்காது

கண்முன்னே
கடல் பார்த்துக் களித்திருந்தோம்
இப்படி ஆகுமென்று யாரறிவார்?

பூம்புகாரைக்
கடல்கொண்ட கதை
இலக்கியங்களில் படித்ததுண்டு
ஒளிப்படத்தில் பார்த்ததுண்டு பூகம்ப அழிவுகளை
புனலாய்ப்போன பூமியை இப்போதுதான் பார்க்கிறோம்

அஸ்திகளை மட்டுமே கரைத்த ஆழ்கடல்
மனிதர்களையும் கரைத்துவிட்டது

எரிப்பதா புதைப்பதா
என்றெல்லாம் சர்ச்சைகள் உண்டு
உடலாவது கிடைக்கிறதா என்று
ஊர் ஊராக அலைந்த பரிதாபம்
மாண்டவர்கள் எல்லாம் மலையாக இருக்கிறார்கள்
மீண்டவர்களோ
நாள்காட்டியின் கடைசித் திகதியாக இருக்கிறார்கள்

கடலே, நீ ஒடிப்பிடித்து விளையாட
எங்கள் உயிர்தானா கிடைத்தது?
மக்கள் வெள்ளத்தை
மற்றொரு வெள்ளம் மறைத்துக்கொண்டது
உன்னைப் பூஜித்தவர்களையே
நீ
பூஜ்ஜியம் ஆக்கிவிட்டாயே

கடலே...கடலே...
இனி
உன் சாம்ராஜ்யம்
கரையோடு நிற்கட்டும்
கரைமீற வேண்டாம்
நாங்கள் கரையேற வேண்டும்

# முயற்சி

நீண்ட நாள்களுக்குப் பிறகு
ஒரே நிசப்தம்
கடிகார சத்தம் மட்டும்
காதுகளில்
ஓடும் காலத்தைக்
கைதட்டிக் கூப்பிட்டு
நிறுத்திவைக்க முயற்சி

# மன எழுத்து

தொடாமலும்
நேசிக்க முடிவதுதான் நிலா
கைபடாமலும்
கவர்ந்திழுப்பதுதான் வானவில்
சுட்டாலும்
சுகம் தருவதுதான் சூரியன்
எதுவும்
இங்கே
தலையெழுத்தல்ல
நம் மனவெழுத்தே

# அன்பு 1

காணடித்தேன்
இதயத்தை
கண்டெடுத்தேன்
இரண்டாக

# அன்பு 2

இறக்கவேண்டும் என்ற
கோட்டிலிருந்து
இருக்கவேண்டும் என்ற கோட்டிற்கு
நடைவண்டியாகிறது
அன்பின் பிடிமானங்கள்

# பெரியார்

ஒரு
சகாப்தம் அல்ல
என்றென்றும்
ஓயாத அலை
சாகாத சப்தம்

# அவள்

நூலிழையில்
தவறவிட்ட
நூலகம்
அவள்

# மழை மனசு

யாரேனும் பிடித்துத் தள்ளுகிறார்களா
இல்லை
நானாகவே விழுகிறேனா?
ஒவ்வொரு முறையும் எழுவதற்கு
நான்படும் பாடுகள்
பிரயத்தனங்கள் யாரறிவார்?
தனிமை வலைக்குள்
என்னை நானே
பிணைத்துக்கொண்டு வருத்திக் கொள்ளுதலும்
கருப்பைக்குள் உதைத்தபடியே
வெளிவரும் குழந்தையாய்
நான் வெளிவருவது நிதர்சனம்
மீண்டும் மீண்டும்
இந்த வட்டத்துக்குள்
ஓடிக்கொண்டே இருக்கிறேன் நான்
பருவம் தப்பினாலும்
மழையின் மாண்பு மறையக்கூடுமோ!
அட,
தாமதமாக வருவதற்காக வருத்தப்பட
மழை என்ன மனிதனின் மனசா?

# பேச்சுத்துணை

ஆகச்சிறந்த நண்பர்களே
என்னுடன்
பேசிக்கொண்டே இருங்கள்
நான் பேசிய வார்த்தைகளை
என் நினைவிலிருந்து
நான்
அழிக்கவேண்டும்
ஏதேனும்
கதைத்துக்கொண்டே இருங்கள்
என் நினைவிலிருந்து
காட்சிகளை நான் நீக்க வேண்டும்
ஏதோ
ஒரு கருத்தை
என் முன்னே வைத்து உரையாடுங்கள்
நான் எப்போதோ
உரையாடியவற்றிலிருந்து வெளிவர வேண்டும்

அவ்வப்போது
ஏதோ ஒரு காரணத்திற்காக
என் சிந்தனையில் தலையிடுங்கள்
ஏனென்றால்
ஒட்டுமொத்த சிந்தனையில்
நான்
உளப்பிறழ்வு அடைகிறேன்
எப்போதும்
நீங்கள்
இருப்பதுபோலவே
பாவனை செய்யுங்கள்
நானும் இருப்பதாய்
இருந்துவிட்டுப் போகிறேன்

# திருமணம்

வண்ணத்துப்பூச்சியான
பின்
மீண்டும்
கூட்டுப்புழுவாகும்
அதிசயம்

# பேரன்பு

நீ
இரண்டு கைகளையும்
நீட்டாமல்
நின்றாலும்
தாவி வருகிறது
மழலையாக
என்
மனம்

# ஆட்டம்

இன்னும் கொஞ்சம்
அடித்துவிட்டுப்போங்கள்
அப்போதுதான்
என் நேர்கொண்ட பார்வையை
நீங்கள்
எதிர்கொள்ள முடியும்

இன்னும் கொஞ்சம்
மிதித்துவிட்டுப்போங்கள்
அப்போதுதான்
என் சீற்றத்தை நீங்கள் பார்க்கமுடியும்

இன்னும் கொஞ்சம்
அவமானப்படுத்துங்கள்
அப்போதுதான்
உங்களைப்பற்றிய மதிப்பீடுகளை
நான் மாற்றிக்கொள்ளமுடியும்

இன்னும் கொஞ்சம்
மரியாதைக் குறைவாக நடத்துங்கள்
அப்போதுதான்
மாண்பு என்றால் என்னவென்று
உங்களுக்கு நான் பாடம் நடத்த முடியும்

உங்களுடைய ஆட்டம்
உங்களுக்கானது
என்னுடைய ஆட்டம்
எங்களுக்கானது
ஆட்டம் காணப்போவது
யாரென்று தெரியாமல்
சடங்குகளையும் சம்பிரதாயங்களையும்
தூக்கிக்கொண்டு திரியாதீர்கள்

# குழந்தைகளே

ஒரு கட்டத்தில்
எல்லா கட்டங்களும்
வட்டம்போல தோன்றுகின்றது
சட்டங்கள் எல்லாம்
இட்டம்போல மாற்றியமைக்கச் சொல்லிச்
சிரித்து விளையாடுகிறது மனசு
காட்சிகளை எல்லாம்
கண்கொண்டு பார்த்தால்
ஒரு பார்வையாளரைப்போல
கடந்து பயணிக்கும் கனவு நிலை
உலக நிலை எல்லாம்
ஒன்றுமே இல்லை என்றாகிறது
குழந்தையும் தெய்வமும்
ஒன்று என்று சொல்லும் கூட்டத்திற்கு
எங்கே தெரியப்போகிறது
குழந்தைகள் மீது பேரன்பு கொண்டவர்களும்
குழந்தைகள்தான் என்று

# ஒப்பனை

எல்லோரும்
நடிகர்கள்தான்
நாம்
இருக்கும்
இடமெல்லாம் மேடைகள் தான்
நம்
பாவனைகள்கூட
அழகான ஒப்பனைகளே
ஆனாலும்
இறுதியில்
திரைவிழும்போது
மறைக்கப்படுகின்றன
உணர்வுகளின் பெருக்கு

# உறுதுணை

மனநிலையும் பட்டென்று மாறுகிறது
சட்டென்று மாறும் வானிலை போல
சிதிலம் சிதலமாகச்
சிதைந்து கிடக்கின்றன மேகங்கள்
அதிலிருந்துதான் மழை வருகிறது
இதயத்திலிருந்து உருகி வழியும் கண்ணீர் போல
வெடித்தபின் கிடைக்கும் பஞ்சு பொதிகள் போல
நெஞ்சு வெடித்தபின்
வாரி இறைக்கப்பட்ட வார்த்தைகள் போல
அத்தனை துயரத்தையும் அடக்கி வைத்திருந்து
வெடித்தபின் முளைக்கும் விதைகள் போல
கொஞ்சம் உறுதுணையாய் இருங்கள்
நான் நட்புடன் நடை பயில்கிறேன்
அல்லது
கவிதைக்கடைகளையாவது
விரித்துவிட்டுப் போகின்றேன்

# உணரும் காலம்

எதையேனும் எழுத வேண்டும்
கை பரபரத்தது
எதையேனும் எழுதிவிடாமல் இருக்கவேண்டும்
மனம் பதைபதைத்தது
எதையேனும் பேச வேண்டும்
ஆவலைத் தொடர்ந்து
ஏதாவது சொல்லிவிடக்கூடாது
எச்சரிக்கிறது நெஞ்சம்
எல்லாவற்றையும் கண்டு கொண்டு செல்லும் கண்கள்
அவ்வப்போது கண்டுகொள்ளாமலும் செல்லும்
எதைத் தின்றால் பித்தம் தெளியும்
எதைத் தின்னாமலிருந்தால்
பித்தம் தெளியும்
என்றுணரும் காலம்
ஆகச்சிறந்த தருணம்

# நிசம்

சில சமயம்
இரவில் சூரியனைப் பார்க்கத் தோன்றுகிறது
பகலில்
நிலா வரத் தோன்றுகிறது
கடலில் வீடு கட்டவும்
தரையில் படகுவிடவும்
இப்படியாக
இக்கரைக்கு அக்கரைப் பச்சையாக
மனசு முழுக்க ஓடிக்கொண்டே இருக்கிறது
வாழ்க்கை ஓட்டத்தில்
நாமும் ஓடிக்கொண்டே

# புதுமொழி

கடற்கரைக்குச் செல்லுதல்
மணலோடு திரும்புதல் என்றாயிற்று
மலைகளுக்குச் செல்லுதல்
அடிவாரத்தோடு பின்வாங்குதல் என்றாயிற்று
சித்திரா பௌர்ணமி
சோறு உண்ணும்போதும்
தரை பார்த்தலே
எனது எல்லை என்றாயிற்று
ஒவ்வாமை உணவில் மட்டுமல்ல
உணர்விலும் உண்டு
அந்தத் தருணங்களில் இருந்து
நமக்கான விடுதலை வாழ்வை
ஏதோ ஒருவிதத்தில் தக்கவைத்தலாயிற்று
என்ன சொல்ல
தீயோரைக்கண்டால் தூர விலகு
துயரம் தருபவற்றிலிருந்து விடுபட்டு
விட்டு விடுதலையாகிப்பற
பறந்துகொண்டே இரு

# பேர் சொல்லும் பிள்ளை

ஆணும் பெண்ணும் சமம்
அப்புறம் விவாதிக்கலாம்
முதலில்
பெண்ணும் பெண்ணும்
சமம் என்றாகட்டும்
கணவன் உள்ள பெண்ணும்
கணவன் இல்லாத பெண்ணும்
குழந்தை உள்ள பெண்ணும்
குழந்தை இல்லாத பெண்ணும்
சமத்துவம் காணட்டும்
படித்த பெண்ணும்
படிக்காதபெண்ணும்
சமநிலை பேணட்டும்
சபைதனில் நடக்கும் சம்பிரதாயங்களில்
அத்தனைபேரும் சமமாகட்டும்
தனித்தன்மைகளே இங்கு அளவுகோலாகட்டும்
எனக்கான மதிப்பு
எனக்கான தாகம்
நான் என்பது நான் மட்டுமே
உலகமே வரவேற்ற
''முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான்...''
எனக்கும் மகிழ்ச்சிதான்
ஆனாலும் எனக்குள் ஒரு கேள்வி
பேர் சொல்லும் பிள்ளை ஆண்களுக்கு மட்டும்தானா?

# விடுகதை

எதையும்
இரண்டாவது தடவையாகக் கேட்காதீர்கள்
ஒருவேளை நான்
இரண்டாக உடைந்துவிடக்கூடும்
எதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தாதீர்கள்
ஒருவேளை நான்
உங்கள் வழிக்கே வந்துவிடக்கூடும்
நான் கொஞ்சம் தூரத்திலேயே இருக்கிறேன்
பாறையென்று நினைத்தே
என்னைப் படம்பிடித்துக்கொண்டு போய்விடுங்கள்
அருகில் வந்து
அட,
பலூன் என்று
பட்டென்று உடைத்து விடாதீர்கள் உண்மையை
உங்கள் வாழ்க்கையை
விருட்சமாக விதைத்துள்ளீர்கள்
நான் போகிறபோக்கில் நொடிக்கு நொடி
ஒரு விடுகதைபோல
வாழ்க்கையை விளையாடி மகிழ்கிறேன்
ஏழு தலைமுறைக்கு மேல்
எவரும் இங்கே சாசுவதம் இல்லை
அட, வேண்டுமானால்
இந்தத் தலைமுறையோடு
என் பெயர் முடிந்துபோகட்டும் விட்டுவிடுங்கள்

# நிசம் மறக்க

தேநீர்க்கோப்பைகள்கூட
மதுக்கிண்ணங்களாகத் தெரிகின்றன
கண்கள்கூட
எல்லாவற்றையும்
இரண்டு இரண்டாகக் காட்டுகின்றன
தவறியும்
என்னை மட்டும்
இரண்டாகக் காட்டவில்லை
நினைவு தப்பிப்போனால்
பரவாயில்லையென்று
நினைத்தும்கூட
எல்லா நினைவுகளும்
விலாவாரியாக விரிந்து
என்னைக்கொல்கின்றன
ஒரு மதுக்கோப்பை
கிடைக்குமா?
நிசமாகவே
நிசம் மறக்க

# கடவுளின் வருகை

கடவுள் இல்லையென்று
சொல்லவில்லை
எதுகடவுள் என்பதில்தான் கருத்து வேறுபாடு
கடவுள் ஒரு சொல்
அந்தச் சொல்லுக்குரிய வடிவம்
எது என்பதைச் சொல்வதுதான் கடினம்
எனக்கு என்னவோ
என் துயரங்கள் எல்லாமே
கடவுளாகவே இருக்கின்றனர்
அவைதான் என்னை
நிமிர வைத்திருக்கின்றன
புரிய வைத்திருக்கின்றன
அட, சற்றுப் பொறுங்கள்
அதோ
ஒரு கடவுள்
அவசர அவசரமாக
வந்து கொண்டிருக்கிறார்
என்னைத்தேடி

# காத்திருப்பின் வசியம்

காத்திருப்பு
ஓர் அழகு
ஓர் அற்புதம்
காத்திருக்கும்போதெல்லாம்
தன் முழு வீச்சைக் காட்டுகிறது
மொழி
அது அலைவீச்சாய்
எழும்பி எழும்பி இறங்குகிறது
அசையாது நிற்கும் கால்களில்
மோதி மோதி பலப்படுத்துகிறது
அவ்வப்போது படாதபாடும் படுத்துகிறது
ஆனாலும் காத்திருப்பு
ஓர் அழகு
நமக்குள் இருக்கும் உணர்வுகளை நமக்குக் காட்டும்
அகால நேரத்தில் அகலாது
சப்தமும் நிசப்தமும் மாறி மாறி கைகோர்த்து நடனமிடும்
நொடிப்பொழுதோ மணிப்பொழுதோ
காத்திருப்பு அவசியம் மட்டுமல்ல
கொஞ்சம் வசியமும்கூட

# அன்பு விட்டகன்று

நம்மைப் பைத்தியமாக்கிவிடும்
பேரன்பு
கண்ணோரம்
நீர் துளிர்க்க வைக்கும்
இதழோரம்
மெலிதான சிரிப்பு படரும்
கொஞ்சம்
கொஞ்சமாக நமக்குள் இறங்கி
நம்மைக் கரைக்கும்
முற்றிலும் கரைந்து
நாம் களவாடப்படும் சமயம்
நாம்
புரிந்துகொள்வோம்
தீயோரைக் கண்டால் மட்டுமல்ல
அன்பைத் தருவோரிடமிருந்தும்
அகன்றுவிடவேண்டும் என்று

# காணா அன்பு

இயற்கையை
இரசித்துக்கொண்டிருந்த என்னைத்
தரதரவென்று இழுத்துவந்து
நடுவீட்டில் விட்டுவிட்டுக்
காணாமல் போனாய்
இப்போது
காணாமல் கிடக்கிறேன் நான்
இதயமற்ற
அந்தப் பேரன்பை

# மௌனம் காதடைத்து

பேசு
பேசு என்றாய்
நான்
பேசத் தொடங்கியதும்
நீ மௌனமானாய்
கதவடைத்துப் போனாற்போல்
நீ காதடைத்துப் போனாய்
நான்
மீண்டும் வாயடைத்து

# சுடுவெளி ஊஞ்சல்

ஒரு சொல்
ஒரு பார்வை
ஒரு மௌனம்
ஒரு திட்டு
ஒரு நக்கல்
ஒரு போராட்டம்
இப்படியாக ஏதோ ஒன்று
ஏதோ ஒரு தருணத்தில்
நம்மை
உற்சாகம் எனும் ஊஞ்சலில் ஆட்டிவிட்டு
மறைந்துபோய்விடுகிறது
அந்தந்தத் தருணங்களில்
அந்தந்தத் தருணங்களை ரசித்தபடி
ஒரு நெடும் பயணம்
சுடும் வெளியில்

# உன் நான்

ஓர் இருட்டு வெளியில்
உருகிக்கொண்டிருக்கும் மெழுகுவர்த்திக்காக
நீ கவலைப்படுகிறாய்
காலம் காலமாக
உன்
கண்ணெதிரே நான்

# கொஞ்சல் வலி

அதீத மன அழுத்தம்
மழலை ஆக்கிவிடுகிறது
கொஞ்சம்
கொஞ்சிவிட்டுத்தான் போயேன்
என் கண்களிலிருந்து துளிர்க்கும் கண்ணீர்
மறுபடியும்
இமைக்குள்ளே ஓடிவிடக்கூடும்
பேரன்பைக்கூட
பிச்சையாகக் கேட்கவைத்துவிடுகிறது
பெரும் வலி

# அந்த நாள்

சமவெளியின்
புல் தரையில்
உன் விரலோடு
விரல் பிணைத்து நடந்து
வாழ்வின் யதார்த்தம் பேசி
இடையிடையே
கவிதை உரையாடி
மரநிழலில் இளைப்பாறி
மகிழ்ந்திருக்கும் நாளொன்று
மனக்கண்ணில் விரிகிறது

# செவி உணவு

பசிக்கும்போது வேண்டும்
ஆலாய்ப்பறந்து
ஆவல் அடங்கி
ஆசையும் அடங்கி
பசி மரத்துப் போனபிறகு
நீ
ஈய்ந்தாலென்ன
ஈயாமல் போனாலென்ன?
நான்
செவியுணவைச் சொன்னேன்

# இறுதியில்

இசை என்னை
உருக்குகிறது உடைக்கிறது
உறையவைக்கிறது
பதற வைக்கிறது
மென்மையாய்
எங்கோ இழுத்துச் செல்கிறது
ஓர் ஊஞ்சலைப்போலவும்
பட்டம்போலவும்
மாறி மாறி மாற்றிப்போடுகிறது
இறுதியில்
என்னை ஒன்றுமில்லாமல் ஆக்கி
கொன்று போடுகிறது
இசை மட்டும்தானா
இதற்கான காரணமா?

# இப்போதும்

ஆண்டாள்கள்
இப்போதும்
இருந்தபடிதான்
என்ன சொல்ல?
மனிதர்களால்
உருவாக்கப்படுவதால்
மன அழுத்தத்துடன்

# பசியாற்றி

பசிக்காகக்
கையேந்த வந்தவர்
ஒற்றை பஜ்ஜியை
உண்ணத் தடுமாறும்
என்னை உணர்ந்து
நகர்ந்துசென்றதை
என் பசியாற்றிப் போனார்
என்றுதானே
சொல்லமுடியும்?

# கவனம்

முள்ளில் விழுந்த
சேலை மட்டுமல்ல
மலரில் விழுந்ததையும்
கவனமாகத்தான்
கையாளவேண்டியிருக்கிறது

# அசைதல்

எங்கோ இருந்தபடி
சிறகசைக்கின்றன
எனது சிறகுகள்
மிதக்கிறேன் நான்

# உன் சொல்

நீ அனுப்பும்
ஒவ்வொரு சொல்லின் மேலும் படர்ந்திருக்கும்
மறைமுகப் பொருளை
நான் அறிவேன்
நீ
எழுதியவற்றிற்கெல்லாம்
எனக்குப் பிடித்த
அர்த்தங்களை
ஆபரணமாகச் சூட்டிவிடுவேன்
மலர்கள்
மாலையாகும்போது
அடையாளம் தெரியாத
அழகு மிளிர்வதுபோல்
உன் சொல்
உனக்கே பொருள்தரும்
வாங்கிக்கொள்

# என்னை நான்

சிறகுகளை விரி
சிறகுகள்பட்டு
எந்தக் காற்றும் நஞ்சு ஆகிவிடாது
மனத்தோடு மனதாகக் கைகுலுக்கு
அப்போது
எந்த பூகம்பமும் நிகழ்ந்துவிடாது
களைப்பாக இருக்கும் போதெல்லாம்
ஒரு மரநிழலில் இளைப்பாறிக்கொள்
அதனால் எந்த இதயத்திலும் கறைபட்டுவிடாது
நீ உள்ளிழுத்த மூச்செல்லாம்
ஒருநாள் ஓடத்தான்போகிறது
அதுவரைக்கும்
அத்தனை அன்பிற்குள்ளும்
என்னை நான்
அடைத்துவைத்துக்கொள்கிறேனே

## சறுக்கல்

சாண் ஏறினால்
முழம் சறுக்குகிறது
விட்டுவிலக
நினைக்கும்போதெல்லாம்

## அன்புகூட

பழகப் பழக
பால் புளிக்கலாம்
அன்பு கூடவா
அன்பே!

# நழுவும் மனது

கைநழுவிய
என் மனது
வழுக்கியபடி
வந்துகொண்டிருக்கிறது
நீயேனும்
உன் கைகளில் ஏந்திக்கொள்

கற்களை எறிந்தாலும்
நான்
சிற்பமாக்குகிறேன்
இன்னா செய்தாரை

# நம் நாம் கண்கள்

நம் கண்களால்
நம்மை நாம்
பருகிக்கொண்டிருந்தபோது
சூடு ஆறாமல்
வேடிக்கை பார்க்கின்றன
தேநீர்க் கோப்பைகள்

# கடிகாரமும் நதியும்

ஒரு கோப்பை தேநீர்போல
புத்துணர்வு தரக்கூடியது உரையாடல்
அதனுள்
எல்லாமும் இருப்பது
இரசித்துப் பேசுபவர்கள் மட்டுமே
அறியும் ரகசியம்
அட,
உனக்கெங்கே தெரியப்போகிறது
நீ ஓடும் கடிகாரம்
நானோ நகரும் நதி

# ஆசை அலை

நாலாபக்கமும்
பறக்கும் மனத்தை
எப்படி இழுத்துக் கட்டுவது
மாறிக்கொண்டே இருக்கும் மனம்
ஏறிக்கொண்டே இருக்கும் சுமை
தாங்க முடியாத வலியுடன்
பாடிக் கொண்டிருக்கிறேன் நான்
இரசித்துக் கொண்டிருக்கிறாய் நீ
கொந்தளிக்கும் உணர்வுகளைக் கொலைசெய்யும் கலை
எனக்குத் தெரியவில்லை
வலைவீசிப் பிடிப்பதற்கு
அகப்பட்டுக்கொள்ளும் மீன்களா
ஆர்ப்பரிக்கும் ஆசை அலைகள்?

# காதோரச் சொற்களும் அழிப்பானும்

தேநீர் அருந்துவதுபோல்
அமைந்திட வேண்டும்
ஓர் உரையாடல்
மது விருந்தாக
அது மாறிவிடக்கூடாது

பேச்சு என்பது
காலை நேரத்து
நடைப்பயணம் போல்
அது பாதயாத்திரை ஆகிவிடக்கூடாது

ஒரு
வண்ணத்துப்பூச்சியின் பறத்தலைப் போல
பேசும் நேரம் குறைந்துவிட்டால்
சங்கடங்கள் இல்லை
எப்போதுமே பிரம்மாண்டங்கள்
வேறு ஒரு வெறுமையை உண்டாக்கிவிடக்கூடும்

ஒரு
கைகுலுக்கலில்
உள்ளங்கையின் நகக்கீரலுக்கு நகர்ந்துவிடலாம்
ஓயாத பேச்சில்
உளக்கீறல்
உருவாகக்கூடும்

கண்ணில் தெரியும்
காட்சிகளை
அழிப்பதற்கு
ஆகச்சிறந்த அழிப்பான் தேவை
காற்றில் பறக்கவிட
காதோரச் சொற்கள் போதும்

# ஏங்கும் அன்பு

சலசலவென்று
ஓடும் ஆறு பிடிக்கிறது
கடகடவென்று ஓடும்
தொடர்வண்டி சத்தம்கூட பிடித்துப்போகிறது
மடமடவென்று விழும் மழையின் ஓசை பிடிக்கிறது
பளபளவென்று ஜொலிக்கும் விண்மீன் பிடிக்கிறது
படபடவென வெடிக்கும்பட்டாசும் பிடிக்கிறது
சுடச்சுடத் தேநீர் குடிக்கப் பிடிக்கிறது
கலகலவென சிரிக்கும்
குழந்தையின் சிரிப்பு பிடிக்கிறது
ஆனால்
இயலாமையாலும்
ஏங்கும் அன்பாலும்
எப்போதேனும்
வளவள எனப் பேசும்
வயதான பெற்றோரின்
பேச்சுமட்டும்
நச்சரிப்பாகத் தோன்றுகிறது
என்ன சொல்ல?
இயற்கையை ரசியுங்கள்
கூடவே இதயங்களையும்

# மாற்று

காற்றுக்கு மாற்றாக
காற்றுதான்
ஒளிக்குப் பதில்
ஒளிதான்
வானத்திற்கு நிகர்
வானம்தான்
அலைகளுக்கு பதில்
என்ன இருக்கிறது?
அதே அலைகள்தான்
எதற்குமே மாற்று
இங்கு இல்லை
மாற்று என்பதெல்லாமே
மாற்றுக் குறைவுதான்
என்ன சொல்ல?
பேரன்பிற்கு நிகராக
பேரன்புதானே இருக்கமுடியும்?

## எட்டடி

பேரன்பு மகளே
பதினாறு அடி
நீ
பாய்ந்த அழகைப் பார்த்து
கற்றுக்கொண்டேன்
எட்டடி பாய்வது
எப்படியென்று?

## மனமுகவரி

எழுந்ததும்
தட்டிவிட்டு நடக்க
மணல் அல்ல
மனசு
நான் என்ன செய்ய
அதற்கு?

முகவரி தந்தால்
அனுப்பிவைக்கிறேன்

## மனிதர்கள்

கண்ணுக்கெட்டிய தூரம்வரை
மனிதர்கள்... மனிதர்கள்
ஆனால்
எவரிடத்தும் இல்லை
எனக்கான
காதுகளும்... இதழ்களும்.....

## முடிவு

ஒவ்வொரு முறையும்
உன்னோடு
பேசக்கூடாதென்றே முடிவெடுக்கிறேன்
உன்
குரல் கேட்டதும்
ஓடி ஒளிந்துகொள்கிறது
என் முடிவு

# வணக்கம்

முதன் முதலாக
வணக்கம் சொல்ல ஆரம்பித்த
ஐந்து வயதுகளில்
வணக்கத்தில்
வணக்கம்
மட்டும்தான் இருந்தது
இப்போது
வணக்கம்
என்ற ஒற்றைச் சொல்
ஒரு வாழ்க்கைபோல்
வந்து கமழ்கிறது
உண்மையில்
வணக்கத்தில்
வணக்கத்தைத் தவிர்த்து
ஏராள உணர்வுகள்
கொட்டிக்கிடக்கின்றன
சொல்லும் தொனியில்
தெறித்துவிழும் உள்ளர்த்தம்
முகபாவனையில்
பறித்து மகிழும் அர்த்தங்கள்

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:53

எழுதும்போது
முன்பின் நடந்த
உரையாடல்களின்
மிச்சமுள்ள அர்த்தமாக
கோடிட்டுக் காட்டி
கோடிக்கணக்கான அர்த்தங்களை
அள்ளி வீசி
மெல்ல அடங்குகிறது
வணக்கம்

REDMI 9 PRIME
AI QUAD CAMERA
10/12/2023 19:54

# சாம்பல் பறவையாய்

நான்
தொலைத்துவிட்ட
குழந்தைமையிலிருந்தும்
தோற்றுப்போய்விட்ட
வாழ்க்கையிலிருந்தும்
எழுந்து பறப்பதற்கு
கொஞ்சம் சிறகுகள்
தேவைப்படுகின்றன
அட
சிறகுகளைச்
நண்பர்களிடம் கேட்காமல்
பகைவர்களிடமா
பரிசாகப்
பெறமுடியும்?
சாம்பல் குவியலில் இருந்து
பறத்தலின் துன்பத்தை
எவரும்
பீனிக்ஸ் பறவையிடம்
கேட்டுத்தெரிந்துகொள்ளுங்கள்

# நான் சிகரம்

விழலுக்கு இறைத்த நீர்
விரலுக்கான பயிற்சியாக
கதைக்கு ஆகாதென்று
நன்றாகவே தெரியும்
ஆனாலும்
என்
பேச்சுப் பயிற்சிக்காகப் பேசுகிறேன்
எனக்கு ஆடவும் தெரியாது பாடவும் தெரியாது
ஆனாலும்
எனக்கான
ஓர் அரங்கத்தை
நான் நிர்மாணித்திருக்கிறேன்
பருவம் தப்பிப் பொழிகின்ற மழை
ஆனாலும்
பொழிதல் அழகு
செயல்களின் கட்டமைப்பில்
சுழன்றுகொண்டிருக்கும் என் உயிர்
கொஞ்சம் கிடந்தாலும்
நான் பிணம் ஆகிவிடக்கூடும்
விமர்சனம் செய்வதைவிட்டு வியப்போடு பாருங்கள்
நான்
தன்னம்பிக்கையின் சிகரம்

# சொற்சுவை

நினைவுகளின்
தருணங்கள் அழகானவை
அவற்றைப்
பகிர்ந்துகொள்ள
நினைக்கும்போதே
நீ வந்து
நின்றிருக்க வேண்டும்
தாமதமாகும் நொடிகளில்
நினைவுகள்
நீர்த்துவிடக்கூடும்
அன்றாட வாழ்வின்
அடுத்தடுத்த நொடிகளில்
பனிக்கட்டிபோல
கரைந்து ஓடிவிடக்கூடும்
சொற்களும்
சுவையிழக்கும்
உடனுக்குடன் பரிமாறிக்கொள்ளாதபோது

# அஞ்சல் வானம்

புலனத்தைவிட
வானத்தின் வலையமைப்பு
ஆகப்பெரியது
என்
இதழ் முத்திரை பதித்து
எழுதி அனுப்பியிருக்கிறேன்
எடுத்துப் படித்துக்கொள்



'சொல்லின்மேல் படரும் பொருள்' தொகுப்பின் ஒவ்வொரு கவிதையும் சமூகம் சார்பாகவும், பெண் சார்பாகவும், பேரன்பு, பிரிதல், வலியெனப் படர்ந்து வளர்ந்து அனைத்துக்குமான பொருளை உணர்த்தி நிற்கின்றது.. புதுக்கவிதையின் போக்கை எவரும் இலகுவில் புரிந்திடும் வகையில் பொருள் உணர்த்தி அத்தனை கவிதைகளும் இலாவகமாகவே கோர்வையாகச் சிறுசிறு தலைப்புகளோடு பயணிப்பது அழகே!

- தேசகி கவி

பிரான்ஸ்

விலை: ₹100